

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கோத்தகிரியில் நடைபெற்ற திமுக கொடியேற்று விழாவில் மாவட்ட திமுக செயலாளர் பா.மு.முபாரக் தலைமையேற்று பேசினார். உடன் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், கே.இ.பிரகாஷ் எம்.பி., தென்றல் செல்வராஜ் உட்பட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மரக்காணத்தில் பேரிடர் மேலாண்மை கட்டிடத்தில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பேரிடர் மேலாண்மை அதிகாரிகளுடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்தார். மாவட்ட ஆட்சியர் சி. பழனி, மாவட்ட எஸ்.பி., தீபக்சுவாட்ச், சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா .இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் , கழக தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### ஃபெஞ்சல் புயல்: செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் - பாதிப்புகளை நேரில் பார்வையிட்டார்!

## நிவாரண முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு ஆறுதல் கூறி – நிவாரணப் பொருட்கள் வழங்கினார்!

சென்னை,டிச.2-

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஃபெஞ்சல் புயல் மழையால் பாதிக்கப்பட்ட செங்கல்பட்டு, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் பாதிப்புகளை நேற்று முன்தினம் (1.12.2024) நேரில் பார்வையிட்டு, நிவாரண முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு நிவாரண உதவிப்பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு:

முதலாவதாக, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் முத்தமிழ் அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள 65 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 120 பொதுமக்களுக்கு அரிசி, பிஸ்கட், பாய், போர்வை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் வட்டம் 108 கொடப்பட்டினம் கிராமத்தில் அமைந்துள்ள பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள கானத்தூர் கொடப்பட்டினம் கிராமத்தை சேர்ந்த இருளர் இன மக்களுக்கு அரிசி, பிஸ்கட், பாய் போர்வை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக மரக்காணம் அரசு மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய நிவாரண தொகுப்பினை வழங்கினார்.

மேலும், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகராட்சி வார்டு எண் 26, நாகலாபுரம் பகுதியில் ஃபெஞ்சல் புயல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு, பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். இந்த பகுதியில் சீரமைப்பு பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், ஃபெஞ்சல் புயல் மழையினால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சேவியர் காலனி பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் ஃபெஞ்சல் புயல் மழையினால் பாதிக்கப்பட்ட சேவியர் காலனி பகுதியைச் சேர்ந்த 500 பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

மேலும் விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டம் கோட்டகுப்பம் ஊராட்சி பகுதியில் அமைந்துள்ள ஜாமி ஆ மஸ்ஜித் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 250 பொதுமக்களுக்கு நிவாரண பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

**பேட்டி!**

விழுப்புரம் பேருந்து நிலைய ஆய்வின்போது செய்தியாளர்களிடம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது:

மழை தொடர்ந்து பெய்து வருகின்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் நானும் அமைச்சர் பெருமக்களும் வந்துள்ளோம். இந்த பேருந்து நிலைய பகுதியில் 60 செ.மீட்டருக்கும் அதிகமான மழை பெய்து வருகின்றது. இன்னும் மழை நிற்க வில்லை. இருந்தபோதும் பம்புகள் மூலமாக தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது. கூடுதலாக பம்புகள் அமைத்து நீரை வெளியேற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. நிரந்தர தீர்வாக பேருந்து நிலயைத்தின் தரையின் உயரத்தை அதிகரிக்க முன்மொழிவு கொடுத்துள்ளார்கள். இதனைத்தொடர்ந்து கடலூர் மாவட்டத்திற்கு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் ஆய்வு செய்ய செல்லவுள்ளோம்.

**கேள்வி:** நேற்று பெய்த மழையில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதே....

**பதில்:** மழை நின்றபிறகு 3 நாட்களுக்கு பிறகு களஆய்வு செய்து இழப்பீடு கண்டிப்பாக கொடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறு துணை முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டம் கடலூர் நகராட்சி புருஷோத்தமன் நகரில் ஃபெஞ்சல் புயல் மழை பாதிப்பு குறித்தும் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் கடலூர் மாவட்டம் கடலூர் நகராட்சி சி.கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் பொதுமக்களுக்கு நிவாரணப்பொருட்கள் அடங்கிய தொகுப்பினையும், இரவு உணவினையும் வழங்கினார்.

இந்த ஆய்வுகளின் போது, வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு கா. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் அ.சிவா, சபா.இராஜேந்திரன், எஸ்.எஸ்.பாலாஜி, மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, சிறப்பு கண்காணிப்பு அலுவலர்கள் ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க.மணிவாசன், விழுப்புரம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அரசு முதன்மைச் செயலாளர்/ போக்குவரத்துத்துறை ஆணையர் சுன்சோங்கம் ஜடக் சிரு, கடலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் /தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்ட இயக்குனர் ராமன் செங்கல்பட்டு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆ.ரா. ராகுல் நாத் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி, (விழுப்புரம்), சிபி ஆதித்யா செந்தில்குமார் (கடலூர்), ச.அருண்ராஜ் (செங்கல்பட்டு) உள்பட அரசு அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# கோத்தகிரி ஒன்றியக் கழகம் சார்பில் கழகக் கொடியேற்று விழா!

## ஆ.இராசா எம்.பி. கொடியேற்றி வைத்தார்!

*உதகை, டிச. 3 -*

*கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, கோத்தகிரி ஒன்றிய கழகம் சார்பில், டானிங்டன் பகுதியில் கழக கொடியேற்று விழா மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் நடைபெற்றது. கோத்தகிரி ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன் அனைவரையும் வரவேற்றார்.*

*கழக துணை பொது செயலாளர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா 47 அடி உயர கம்பத்தில் கழக கொடியேற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.*

*தேர்தல் பணி செயலாளர் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் கல்வெட்டினை திறந்து வைத்தார்.*

*மாநில இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி., தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரது திருவுருவப் படங்களை திறந்து வைத்தார்.*

*நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், கிளை கழக நிர்வாகிகள், செயல் வீரர்கள் திரளாக கலந்து கொண்டனர்.*

### புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில்

# விராலிமலை சட்டமன்றதொகுதி வலைதளப்பயிற்சி பாசறை கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது!

*புதுக்கோட்டை, டிச. 3 -*

*புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் விராலிமலை சட்டமன்றத் தொகுதி வலைதளப்பயிற்சி பாசறை கூட்டம் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் எம்.கே.எஸ் திருமண மண்டபம் மேட்டுச்சாலை இலுப்பூரில் நடைபெற்றது.*

*மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு. சண்முகம் வரவேற்புரையில், கழக இளைஞரணி துணைச் செயலாளர் இளையராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மு.கலைஞர் கருணாநிதி, விளாப்பட்டி சிவா நூ. அன்சாரி பாஷீத் ஆகியோரது முன்னிலையில், கழக செய்திதொடர்பு துணைச் செயலாளர் சகோதரர் சூர்யா கிருஷ்ண மூர்த்தி, ஊடகவியலாளர் வரவானை செந்தில் குமார் ஆகியோர் கலந்துகொண்டு பாகநிலை இளைஞரணி பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பெடுத்தார்கள்.*

*நிகழ்வில் கழக விவசாய தொழிலாளர் அணி துணை தலைவர் த.சந்திர சேகரன், விவசாய தொழிலாளர் துணை செயலாளர் கே.ஆர்.என்.போஸ், ஒன்றிய கழக செயலாளர்கள் மு.பி.ம.சத்தியசீலன், ஓ.எஸ்.வெங்கடாசலம், அ.இளங்குமரன், பொதுக் குழு உறுப்பினர்கள் எம். பழனியப்பன், எம்.செந்தில்குமார், இருப்பூர் பேரூர் கழக செயலாளர் வை.விஜயகுமார், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கை.பழ னிச்சாமி உள்ளிட்ட ஒன்றிய, பேரூர், கிளை, பாக இளைஞர் அணி பொறுப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*



புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு கலை கல்லூரி அருகில் தமிழக துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதிசெந்தில் , துணை மேயர் மு.லியாகத் அலி ஆகியோர் ஏற்பாட்டில் மாநகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு பிரியாணி வழங்கி மகிழ்ந்தனர். நிகழ்வில், மாநகராட்சி நகர்நல அலுவலர் பாஸ்கர், துப்புரவு ஆய்வாளர் மணிவண்ணன், வட்ட கழக செயலாளர்கள் தனபால், வழக்கறிஞர் ஆனந்த், சரவணன், வட்டப் பிரதிநிதி டி.ஆர்.குமார், கட்சி நிர்வாகிகள் விஜயகுமார், ரமேஷ்குமார் துப்புரவு மேற்பார்வையாளர் தனபால், முத்து, மணிமுத்து மற்றும் கழக நிர்வாகிகள், மாநகராட்சி பணியாளர்கள் உடன் இருந்தனர்.



சேலம் மாவட்டத்தில் துணை முதல்வர். மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தையொட்டி வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி பனமரத்துப்பட்டி ஒன்றியத்தில் உள்ள முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு மாநில தி.மு.க. தகவல் தொழில் நூட்ப அணி துணை செயலாளர். டாக்டர். ஏ.கே. தருண். அறுசுவை உணவு வழங்கினார். உடன் மாவட்டக் கழக செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஒன்றிய செயலாளர் உமாசங்கர் மற்றும் சதீஷ்.ஆனந்த். தேவேந்திரபிரபு. உட்பட கழக நிர்வாகிகள் இருந்தனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில்

# அ.தி.மு.க., நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் 200 க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. முன்னிலையில்!

*நாமக்கல், டிச. 3 -*

*நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் அ.தி.மு.க. மற்றும் நாம்தமிழர் கட்சியில் இருந்து விலகியவர்கள் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார்.*

*இதில் மோகனூர் பேரூர் பகுதியில் இருந்து அ.தி.மு.க. மற்றும் நாம் தமிழ் கட்சியில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தனர்.*

*நாம் தமிழர் கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் வினோத் குமார், நகர செயலாளர் செந்தில், மகளிர் பாசறை வள்ளி ஆகியோர் தலைமையில் 200க்கும் மேற்பட்டோர் நாம் தமிழர் கட்சியில் இருந்து விலகி நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராம லிங்கம், மோகனூர் பேரூர் கழக செயலாளர் செல்ல வேல் (எ) சி.செல்லப்பன் ஆகியோர் முன்னிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர்.*

*அவர்களுக்கு கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எம்.பி சால்வை அணிவித்து வரவேற்றார்.*

*இதைத் தொடர்ந்து உறுப்பினர் படிவங்கள் புதியதாக இணைந்தவர்களுக்கு அவர் வழங்கினார். அப்போது அவர் பேசுகையில், நாம் தமிழர் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் வினோத்குமார், நகர செயலாளர் செந்தில், மகளிர் பாசறை வள்ளி உள்ளிட்ட 75 பேர் நாம் தமிழர் கட்சியில் இருந்து விலகி திமுகவில் இணைந்துள்ளனர். அவர்களை வரவேற்கிறேன் என்றார்.*

*இந்த நிகழ்ச்சியில், மாவட்ட அவைத்தலைவர் மணிமாறன், ஒன்றிய செயலாளர்கள் வி.கே.பழனிவேல், பெ.நவலடி, நாமக்கல் மேற்கு நகர செயலாளர் சிவக்குமார், மாநகர மேயர் து.கலாநிதி, மூத்த வழக்கறிஞர் அறிவழகன், முன்னாள் மாவட்ட அவைத்தலைவர் உடையவர், மோகனூர் பேரூராட்சி தலைவர் வனிதா, துணைத் தலைவர் சரவணகுமார், சார்பு அணி நிர்வாகிகள் கிருபாகரன், ஆனந்த்பாபு, பொன் சித்தார்த், அகிலன், சுகுமார், நிர்வாகிகள் வரதராஜன், ரவிச்சந்திரன், காமராஜ், சந்திரசேகர், சேகர், மணிகண்டன், உதயபானு, ராஜமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.*



சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி வீரகனூர் பேரூராட்சியில் உள்ள 9 மற்றும் 10 வார்டு பகுதிகளில் தொடர் மழையின் காரணமாக ஒரு வீடு இடிந்து விழுந்து வீட்டிற்குள் வெள்ளம் புகுந்தது. இந்த தகவல் அறிந்து தலைவாசல் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் பி.ஜி.அழகுவேல் நேரில் சந்தித்து அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறி அவர்களை அரசு பள்ளியில் தங்க வைத்து அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தார். அப்போது கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மூலனூர் பேருந்து நிலைய வளாகத்தில் நரிக்குறவர் சமூகத்தைச் சார்ந்த 25 குடும்பங்களுக்கு போர்வை, கம்பளி, உணவு பொட்டலங்கள் மற்றும் இனிப்புகளை மேற்கு ஒன்றிய செயலாளர் துரை.தமிழரசு, பேரூர் செயலாளர், பேரூராட்சி தலைவர் மக்கள் க.தெண்டபாணி ஆகியோர் வழங்கினர். இதில் பேரூராட்சி துணைத் தலைவர், மேற்கு ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் அ.பழனிச்சாமி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பிரஸ் மனோகரன் உள்பட ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.